# வவுனியாப் பல்கலைக்கழகம், இலங்கை

# தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலையம்

# ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2025/2026

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ் மற்றும் கணிதத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ-4) இனைக் கொண்டிருப்பதுடன் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் மற்றும் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் மற்றும் கணிதத்தில் திறமைச் சித்தி பெற்று ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் முன்பள்ளிக் கற்பித்தலில் ஆகக் குறைந்தது 03 வருடகால அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

4. வவுனியாப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மேற்குறிப்பிட்டவற்றிற்கு சமமான வேறு ஏதேனும் உயர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

5. விண்ணப்ப முடிவுத் திகதியில் 50 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்

**கற்கைநெறிக் காலம்** - மூன்று தவணைகள் (15 மாதங்கள்), (வார இறுதி நாட்கள்).

**மொழிமூலம்** - தமிழ்

**கற்கை நிலையம்** - வவுனியாப் பல்கலைக்கழகம்

**கற்கைநெறிக் கட்டணம்** - ரூபா 60,000.00

**விண்ணப்பப்படிவக் கட்டணம்** - ரூபா 500.00

**கற்கைநெறிக்கான தெரிவு** - எழுத்துப்பரீட்சையில் - (மொழியாற்றல், நுண்ணறிவு மற்றும் முன்பள்ளிக் கற்பித்தல் அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்ட பரீட்சை) சித்தியடைந்திருத்தலுடன் நேர்முகத்தேர்விலும் சித்தியடைதல் வேண்டும்.

**திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் புலமைப்பரிசில் வழங்கப்படும்.**

விண்ணப்பப்படிவத்தினை www.vau.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரூபா 500.00 கட்டணத்தினை கீழுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்தி பெறப்பட்ட வைப்புச்சீட்டினை (மூலப்பிரதி) இணைத்து நேரடியாகவோ அல்லது **சிரேஸ்ட உதவிப்பதிவாளர், தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலையம், வவுனியாப் பல்கலைக்கழகம், பூங்கா வீதி, வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2025/2026"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு:- ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்கத்தேவையில்லை**

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | : | வவுனியாப் பல்கலைக்கழகம் |
| கணக்கிலக்கம் | : | 040-1-003-8-1640087 |
| வங்கி | : | மக்கள் வங்கி |
| வங்கி குறியீடு | : | 7135 |
| வைப்புக்குறியீடு | : | CDE0008 (வைப்புக்குறியீட்டுடன் அடையாள அட்டை இல. குறிப்பிடவும்) |
| கிளை | : | வவுனியா |

**Online Banking, ATM இயந்திரத்தில் மேற்கொள்ளப்படும் வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**விண்ணப்ப முடிவுத்திகதி** : 14.03.2025

**குறிப்பு: கற்கைநெறிக் கட்டணம் மீள் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு எந்த கற்கைநெறிக்கோ, நபருக்கோ மாற்றப்பட முடியாது.**

மேலதிக தகவல்களுக்கு

**கலாநிதி. ச. சண்முகதாசன்**

கல்வி இணைப்பாளர்

ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி

வவுனியாப் பல்கலைக்கழகம்

தொ.பே. – 0777589702 / அலுவலகம்: 0242223910

மின்னஞ்சல் - cdce@vau.ac.lk

27/02/2025

பதிவாளர்

வவுனியாப் பல்கலைக்கழகம்